ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திருப்பேர்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திருப்பேர்

## பொதுத்தனியன்கள்

ராமாநுஜ த$_3$யாபாத்ரம் ஜ்ஞாநவைராக்$_3$ய பூ$_4$ஷணம் |
ஸ்ரீமத்$_3$வேங்கடநாதா$_2$ர்யம் வந்தே$_3$ வேதா$_3$ந்ததே$_3$ஶிகம் || **1** ||

ஸ்ரீஶைலேஶ த$_3$யாபாத்ரம் தீ$_4$ப$_4$க்த்யாதி$_3$கு$_3$ணார்ணவம் |
யதீந்த்$_3$ரப்ரவணம் வந்தே$_3$ ரம்யஜாமாதரம் முநிம் || **2** ||

லக்ஷ்மீநாத$_2$ஸமாரம்பா$_4$ம் நாத$_2$யாமுநமத்$_4$யமாம் |
அஸ்மதா$_3$சார்யபர்யந்தாம் வந்தே$_3$ கு$_3$ருபரம்பராம் || **3** ||

யோ நித்யமச்யுதபதா$_3$ம்பு$_3$ஜயுக்$_3$மருக்ம -
வ்யாமோஹதஸ்ததி$_3$தராணி த்ரு’ணாயமேநே |
அஸ்மத்$_3$கு$_3$ரோர்ப$_4$க$_3$வதோஸ்ய த$_3$யைகஸிந்தோ$_4$:
ராமாநுஜஸ்ய சரணௌ ஶரணம் ப்ரபத்$_3$யே || **4** ||

மாதா பிதா யுவதயஸ்தநயா விபூ$_4$தி:
ஸர்வம் யதே$_3$வ நியமேந மத$_3$ந்வயாநாம் |
ஆத்$_3$யஸ்ய ந: குலபதேர்வகுளாபி$_4$ராமம்
ஸ்ரீமத் தத$_3$ங்க்$_4$ரியுக$_3$ளம் ப்ரணமாமி மூர்த்$_4$நா || **5** ||

பூ$_4$தம் ஸரஶ்ச மஹதா$_3$ஹ்வய ப$_4$ட்டநாத$_2$
ஸ்ரீப$_4$க்திஸார குலஶேக$_2$ர யோகி$_3$வாஹாந் |
ப$_4$க்தாங்க்$_4$ரிரேணு பரகால யதீந்த்$_3$ர மிஶ்ராந்
ஸ்ரீமத் பராங்குஶமுநிம் ப்ரணதோஸ்மிநித்யம் || **6** ||

## பெரியாழ்வார் தனியன்கள்

கு$_3$ருமுக$_2$மநதீ$_4$த்ய ப்ராஹ வேதா$_3$நஶேஷாந்
நரபதிபரிக்லு’ப்தம் ஶுல்கமாதா$_3$துகாம:।
ஶ்வஶுரமமரவந்த்$_3$யம் ரங்க$_3$நாத$_2$ஸ்ய ஸாக்ஷாத்
த்$_3$விஜகுலதிலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி ॥

மின்னார் தடமதிள்சூழ் வில்லிபுத்தூரென்றொரு கால் ⋆
சொன்னார் கழற்கமலம் சூடினோம் ⋆ - முன்னாள்
கிழியறுத்தான் என்றுரைத்தோம் ⋆ கீழ்மையினிற் சேரும்
வழியறுத்தோம் நெஞ்சமே ! வந்து

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தானென்று ⋆
ஈண்டிய சங்கம் எடுத்தூத ⋆ வேண்டிய
வேதங்களோதி ⋆ விரைந்து கிழியறுத்தான் ⋆
பாதங்கள் யாமுடைய பற்று

## பெரியாழ்வார் திருமொழி – திருப்பல்லாண்டு

‡ பல்லாண்டு பல்லாண்டு ⋆ பல்லாயிரத்தாண்டு ⋆
பல கோடி நூறாயிரம் ⋆
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா ! ⋆ உன்
சேவடி செவ்வி திருக்காப்பு ॥ **1.1.1** ॥

‡ அடியோமோடும் நின்னோடும் ⋆
பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு ⋆
வடிவாய் நின் வல மார்பினில் ⋆
வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு ⋆
வடிவார் சோதி வலத்துறையும் ⋆
சுடராழியும் பல்லாண்டு ⋆

படை போர் புக்கு முழங்கும் ⋆
    அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே ‖ **1.1.2** ‖

வாழாட் பட்டு நின்றீருள்ளீரேல் ⋆
    வந்து மண்ணும் மணமும் கொண்மின் ⋆
கூழாட் பட்டு நின்றீர்களை ⋆
    எங்கள் குழுவினில் புகுதலொட்டோம் ⋆
ஏழாட் காலும் பழிப்பிலோம் நாங்கள் ⋆
    இராக்கதர்வாழ் ⋆ இலங்கை
பாழாளாகப் படை பொருதானுக்குப் ⋆
    பல்லாண்டு கூறுதுமே ‖ **1.1.3** ‖

ஏடுநிலத்தில் இடுவதன் முன்னம் வந்து ⋆
    எங்கள் குழாம் புகுந்து ⋆
கூடு மனமுடையீர்கள் வரம்பொழி ⋆
    வந்தொல்லைக் கூடுமினோ ⋆
நாடு நகரமும் நன்கறிய ⋆
    நமோ நாராயணாயவென்று ⋆
பாடு மனமுடைப் பத்தருள்ளீர் ! ⋆
    வந்து பல்லாண்டு கூறுமினே ‖ **1.1.4** ‖

அண்டக்குலத்துக்கதிபதி ஆகி ⋆
    அசுரர் இராக்கதரை ⋆
இண்டைக் குலத்தை எடுத்துக் களைந்த ⋆
    இருடீகேசன் தனக்கு ⋆
தொண்டக் குலத்திலுள்ளீர் ! வந்தடி தொழுது ⋆
    ஆயிர நாமம்சொல்லி ⋆

sunder kidambi
prapatti dot com
sunder kidāmbi

பண்டைக் குலத்தைத் தவிர்ந்து ⋆
பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்மினே ॥ **1.1.5** ॥

எந்தை தந்தை தந்தை தந்தை தம் மூத்தப்பன் ⋆
ஏழ் படி கால் தொடங்கி ⋆
வந்து வழிவழி ஆட்செய்கின்றோம் ⋆
திருவோணத் திருவிழவில்
அந்தியம் போதில் அரியுருவாகி ⋆
அரியை அழித்தவனை ⋆
பந்தனை தீரப் பல்லாண்டு ⋆
பல்லாயிரத்தாண்டென்று பாடுதுமே ॥ **1.1.6** ॥

தீயிற் பொலிகின்ற செஞ்சுடராழி ⋆
திகழ் திருச்சக்கரத்தின் ⋆
கோயிற்பொறியாலே ஒற்றுண்டு நின்று ⋆
குடிகுடி ஆட்செய்கின்றோம் ⋆
மாயப் பொருபடை வாணனை ⋆
ஆயிரந் தோளும் பொழி குருதி
பாய ⋆ சுழற்றிய ஆழி வல்லானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.7** ॥

நெய்யிடை நல்லதோர் சோறும் ⋆
நியதமும் அத்தாணிச் சேவகமும் ⋆
கையடைக் காயும் கழுத்துக்குப் பூணொடு ⋆
காதுக்குக் குண்டலமும் ⋆
மெய்யிட நல்லதோர் சாந்தமும் தந்து ⋆
என்னை வெள்ளுயிராக்க வல்ல ⋆

sunder kidambi prapatti dot com sunder kidambi

பையுடை நாகப் பகைக்கொடியானுக்குப் ⋆
    பல்லாண்டு கூறுவனே ‖ **1.1.8** ‖

உடுத்துக் களைந்த நின் பீதகவாடை உடுத்துக் ⋆
    கலத்ததுண்டு ⋆
தொடுத்த துழாய்மலர் சூடிக் களைந்தன ⋆
    சூடுமித்தொண்டர்களோம் ⋆
விடுத்த திசைக்கருமம் திருத்தித் ⋆
    திருவோணத் திருவிழவில் ⋆
படுத்த பைந்நாகணைப் பள்ளிகொண்டானுக்குப் ⋆
    பல்லாண்டு கூறுதுமே ‖ **1.1.9** ‖

எந்நாள் எம்பெருமான் ⋆
    உன்தனக்கடியோம் என்றெழுத்துப்பட்ட
அந்நாளே ⋆ அடியோங்கள் அடிக்குடில் ⋆
    வீடுபெற்றுய்ந்ததுகாண் ⋆
செந்நாள் தோற்றித் ⋆
    திருமதுரையுள் சிலைகுனித்து ⋆ ஐந்தலைய
பைந்நாகத் தலை பாய்ந்தவனே ! ⋆
    உன்னைப் பல்லாண்டு கூறுதுமே ‖ **1.1.10** ‖

‡ அல்வழக் கொன்றுமில்லா ⋆
    அணிகோட்டியர் கோன் ⋆ அபிமான துங்கன்
செல்வனைப்போலத் ⋆
    திருமாலே ! நானும் உனக்குப் பழவடியேன் ⋆
நல்வகையால் நமோ நாராயணாவென்று ⋆
    நாமம் பல பரவி ⋆

sunder kidambi prapatti dot com sunder kidāmbi

பல்வகையாலும் பவித்திரனே !⋆
உன்னைப் பல்லாண்டு கூறுவனே ‖ **1.1.11** ‖

‡ பல்லாண்டென்று பவித்திரனைப்⋆
பரமேட்டியை⋆ சார்ங்கம் என்னும்
வில்லாண்டான் தன்னை⋆
வில்லிபுத்தூர் விட்டுசித்தன் விரும்பியசொல்⋆
நல்லாண்டென்று நவின்றுரைப்பார்⋆
நமோ நாராயணாயவென்று⋆
பல்லாண்டும் பரமாத்மனைச்⋆
சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டே ‖ **1.1.12** ‖

## பெரியாழ்வார் திருமொழி – வேலிக்கோல்

கொங்கும் குடந்தையும்⋆ கோட்டியூரும் பேரும்⋆
எங்கும் திரிந்து⋆ விளையாடும் என் மகன்⋆
சங்கம் பிடிக்கும்⋆ தடக்கைக்குத் தக்க⋆ நல்
அங்கம் உடையதோர் கோல் கொண்டு வா !⋆
அரக்கு வழித்ததோர் கோல் கொண்டு வா ‖ **2.6.2** ‖

## பெரியாழ்வார் திருமொழி – வெண்ணெய்விழுங்கி

கொண்டல் வண்ணா ! இங்கே போதராயே⋆
கோயிற் பிள்ளாய் ! இங்கே போதராயே⋆
தெண் திரை சூழ் திருப்பேர்க் கிடந்த⋆
திருநாரணா ! இங்கே போதராயே⋆
உண்டு வந்தேன் அம்மம் என்று சொல்லி⋆
ஓடி அகம் புக ஆய்ச்சி தானும்⋆

sunder kidambi
prapatti dot com
sunder kidambi

கண்டெதிரே சென்றெடுத்துக் கொள்ளக் ⋆
கண்ண பிரான் கற்ற கல்வி தானே ‖ **2.9.4** ‖

## பெரிய திருமொழி – கையிலங்கு

‡ கை இலங்காழி சங்கன் ⋆ கரு முகில் திரு நிறத்தன் ⋆
பொயிலன் மெய்யன் ⋆ தன் தாள் அடைவரேல் அடிமை ஆக்கும் ⋆
செய் அலர் கமலம் ஓங்கு ⋆ செறி பொழில் தென் திருப்பேர் ⋆
பை அரவணையான் நாமம் ⋆ பரவி நான் உய்ந்தவாறே ‖ **5.9.1** ‖

வங்கமார் கடல்கள் ஏழும் ⋆ மலையும் வானகமும் மற்றும் ⋆
அங்கண் மா ஞாலம் எல்லாம் ⋆ அமுது செய்துமிழ்ந்த எந்தை ⋆
திங்கள் மா முகில் அணவு ⋆ செறி பொழில் தென் திருப்பேர் ⋆
எங்கள் மால் இறைவன் நாமம் ⋆ ஏத்தி நான்
உய்ந்தவாறே ‖ **5.9.2** ‖

ஒருவனையுந்திப் பூமேல் ⋆ ஓங்குவித்தாகம் தன்னால் ⋆
ஒருவனைச் சாபம் நீக்கி ⋆ உம்பராள் என்று விட்டான் ⋆
பெரு வரை மதிள்கள் சூழ்ந்த ⋆ பெரு நகர் அரவணை மேல் ⋆
கரு வரை வண்ணன் தென் பேர் ⋆ கருதி நான்
உய்ந்தவாறே ‖ **5.9.3** ‖

ஊன் அமர் தலை ஒன்றேந்தி ⋆ உலகெலாம் திரியும் ஈசன் ⋆
ஈன் அமர் சாபம் நீக்காய் என்ன ⋆ ஒண் புனலை ஈந்தான் ⋆
தேன் அமர் பொழில்கள் சூழ்ந்த ⋆ செறி வயல் தென் திருப்பேர் ⋆
வானவர் தலைவன் நாமம் ⋆ வாழ்த்தி நான்
உய்ந்தவாறே ‖ **5.9.4** ‖

வக்கரன் வாய் முன் கீண்ட ⋆ மாயனே ! என்று வானோர்
புக்கு ⋆ அரண் தந்தருளாய் என்ன ⋆ பொன் ஆகத்தானை ⋆

நக்கரி உருவம் ஆகி ⋆ நகம் கிளர்ந்திடந்துகந்த ⋆
சக்கரச்செல்வன் தென் பேர்த் ⋆ தலைவந்தாள்
அடைந்துய்ந்தேனே ‖ **5.9.5** ‖

விலங்கலால் கடல் அடைத்து ⋆ விளங்கிழை பொருட்டு ⋆ வில்லால்
இலங்கை மா நகர்க்கிறைவன் ⋆ இருபது புயம் துணித்தான் ⋆
நலங்கொள் நான்மறை வல்லார்கள் ⋆ ஓத்தொலி ஏத்தக் கேட்டு ⋆
மலங்கு பாய் வயல் திருப்பேர் ⋆ மருவி நான்
வாழ்ந்தவாறே ‖ **5.9.6** ‖

வெண்ணெய் தான் அமுது செய்ய ⋆ வெகுண்டு மத்தாய்ச்சி ஓச்சி ⋆
கண்ணியார் குறுங்கயிற்றால் ⋆ கட்ட வெட்டென்றிருந்தான் ⋆
திண்ண மா மதிள்கள் சூழ்ந்த ⋆ தென் திருப்பேருள் ⋆ வேலை
வண்ணனார் நாமம் ⋆ நாளும் வாய்
மொழிந்துய்ந்தவாறே ‖ **5.9.7** ‖

அம் பொனார் உலகம் ஏழும் அறிய ⋆ ஆய்ப்பாடி தன்னுள் ⋆
கொம்பனார் பின்னை கோலம் ⋆ கூடுதற்கேறு கொன்றான் ⋆
செம் பொனார் மதிள்கள் சூழ்ந்த ⋆ தென் திருப்பேருள் மேவும் ⋆
எம் பிரான் நாமம் ⋆ நாளும் ஏத்தி நான் உய்ந்தவாறே ‖ **5.9.8** ‖

நால் வகை வேதம் ஐந்து வேள்வி ⋆ ஆறங்கம் வல்லார் ⋆
மேலை வானவரில் மிக்க ⋆ வேதியர் ஆதி காலம் ⋆
சேல் உகள் வயல் திருப்பேர்ச் ⋆ செங்கண் மாலோடும் வாழ்வார் ⋆
சீல மா தவத்தர் சிந்தை ஆளி ⋆ என் சிந்தையானே ‖ **5.9.9** ‖

‡ வண்டறை பொழில் திருப்பேர் ⋆ வரி அரவணையில் ⋆ பள்ளி
கொண்டுறைகின்ற மாலைக் ⋆ கொடி மதிள் மாட மங்கை ⋆

திண் திறல் தோள் கலியன் ⋆ செஞ்சொலால் மொழிந்த மாலை ⋆
கொண்டிவை பாடியாடக் ⋆ கூடுவர் நீள் விசும்பே ॥ **5.9.10** ॥

பெரிய திருமொழி – ஒருநல் சுற்றம்

துளக்கமில் சுடரை ⋆ அவுணன் உடல்
பிளக்கும் மைந்தனைப் ⋆ பேரில் வணங்கிப் போய் ⋆
அளப்பில் ஆரமுதை ⋆ அமரர்க்கருள்
விளக்கினை ⋆ சென்று ⋆ வெள்ளறைக் காண்டுமே ॥ **10.1.4** ॥

‡ பெற்றம் ஆளியைப் ⋆ பேரில் மணாளனை ⋆
கற்ற நூல் ⋆ கலிகன்றி உரை செய்த ⋆
சொல் திறம் இவை ⋆ சொல்லிய தொண்டர்கட்கு ⋆
அற்றம் இல்லை ⋆ அண்டம் அவர்க்காட்சியே ॥ **10.1.10** ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த – திருக்குறுந்தாண்டகம்

பேசினார் பிறவி நீத்தார் ⋆ பேருளான் பெருமை பேசி ⋆
ஏசினார் உய்ந்து போனார் ⋆ என்பதிவ் உலகின் வண்ணம் ⋆
பேசினேன் ஏச மாட்டேன் ⋆ பேதையேன் பிறவி நீத்தற்கு ⋆
ஆசையோ பெரிது கொள்க ⋆ அலை கடல் வண்ணர் பாலே ॥ **17** ॥

‡ பிண்டியார் மண்டை ஏந்திப் ⋆ பிறர் மனை திரிதந்துண்ணும்
உண்டியான் ⋆ சாபம் தீர்த்த ஒருவன் ஊர் ⋆ உலக மேத்தும்
கண்டியூர் அரங்கம் மெய்யம் ⋆ கச்சி பேர் மல்லை என்று
மண்டினார் ⋆ உய்யல் அல்லால் ⋆ மற்றை ஆர்க்குய்யல் ஆமே ॥ **19** ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த – திருநெடுந்தாண்டகம்

‡ நீரகத்தாய் ! நெடுவரையின் உச்சி மேலாய் ! ⋆
நிலாத்திங்கள் துண்டத்தாய் ! நிறைந்த கச்சி

ஊரகத்தாய் ⋆ ஒண் துறை நீர் வெஃகா உள்ளாய் ! ⋆
உள்ளுவார் உள்ளத்தாய் ⋆ உலகம் ஏத்தும்
காரகத்தாய் ! கார்வானத்துள்ளாய் ! கள்வா ! ⋆
காமரு பூங்காவிரியின் தென்பால் மன்னு
பேரகத்தாய் ⋆ பேராதென் நெஞ்சின் உள்ளாய் ! ⋆
பெருமான் உன் திருவடியே பேணினேனே ॥ **8** ॥

வங்கத்தால் மா மணி வந்துந்து முந்நீர்
மல்லையாய் ! ⋆ மதிள் கச்சி ஊராய் ! பேராய் ⋆
கொங்கத்தார் வளங்கொன்றை அலங்கல் மார்வன் ⋆
குலவரையன் மடப் பாவை இடப்பால் கொண்டான் ⋆
பங்கத்தாய் ! பாற்கடலாய் ! பாரின் மேலாய் ! ⋆
பனி வரையின் உச்சியாய் ! பவள வண்ணா ⋆
எங்குற்றாய் எம் பெருமான் ! உன்னை நாடி ⋆
ஏழையேன் இங்ஙனமே உழிதருகேனே ! ॥ **9** ॥

முற்றாரா வன முலையாள் பாவை ⋆ மாயன்
மொய் அகலத்துள் இருப்பாள் அஃதும் கண்டும்
அற்றாள் ⋆ தன் நிறை அழிந்தாள் ஆவிக்கின்றாள் ⋆
அணி அரங்கம் ஆடுதுமோ தோழீ ! என்னும் ⋆
பெற்றேன் வாய்ச் சொல் இறையும் பேசக் கேளாள் ⋆
பேர் பாடித் தண் குடந்தை நகரும் பாடி ⋆
பொற்றாமரைக் கயம் நீராடப் போனாள் ⋆
பொருவற்றாள் என் மகள் உம் பொன்னும் அஃதே ॥ **19** ॥

### திருவாய்மொழி – திருமாலிருஞ்சோலைமலை

‡ திருமாலிருஞ்சோலை மலை ⋆ என்றேன் என்ன ⋆
திருமால் வந்து ⋆ என் நெஞ்சு நிறையப் புகுந்தான் ⋆

குரு மா மணியுந்து புனல் ⋆ பொன்னித் தென்பால் ⋆
திருமால் சென்று சேர்விடம் ⋆ தென் திருப்பேரே ‖ **10.8.1** ‖

பேரே உறைகின்ற பிரான் ⋆ இன்று வந்து ⋆
பேரேன் என்று ⋆ என் நெஞ்சு நிறையப் புகுந்தான் ⋆
கார் ஏழ் கடல் ஏழ் ⋆ மலை ஏழ் உலகுண்டும் ⋆
ஆரா வயிற்றானை ⋆ அடங்கப் பிடித்தேனே ‖ **10.8.2** ‖

பிடித்தேன் பிறவி கெடுத்தேன் ⋆ பிணி சாரேன் ⋆
மடித்தேன் மனை வாழ்க்கையுள் ⋆ நிற்பதோர் மாயையை ⋆
கொடிக் கோபுர மாடங்கள் சூழ் ⋆ திருப்பேரான் ⋆
அடிச் சேர்வதெனக்கு ⋆ எளிதாயின வாறே ! ‖ **10.8.3** ‖

எளிதாயினவாறென்று ⋆ என் கண்கள் களிப்பக் ⋆
களிதாகிய சிந்தையனாய்க் ⋆ களிக்கின்றேன் ⋆
கிளி தாவிய சோலைகள் சூழ் ⋆ திருப்பேரான் ⋆
தெளிதாகிய ⋆ சேண் விசும்பு தருவானே ‖ **10.8.4** ‖

வானே தருவான் ⋆ எனக்கா என்னோடொட்டி ⋆
ஊனேய் குரம்பை ⋆ இதனுள் புகுந்து ⋆ இன்று
தானே தடுமாற்ற ⋆ வினைகள் தவிர்த்தான் ⋆
தேன் ஏய் பொழில் ⋆ தென் திருப்பேர் நகரானே ‖ **10.8.5** ‖

திருப்பேர் நகரான் ⋆ திருமாலிருஞ்சோலைப் ⋆
பொருப்பே உறைகின்ற பிரான் ⋆ இன்று வந்து ⋆
இருப்பேன் என்று ⋆ என் நெஞ்சு நிறையப் புகுந்தான் ⋆
விருப்பே பெற்று ⋆ அமுதம் உண்டு களித்தேனே ‖ **10.8.6** ‖

உண்டு களித்தேற்கு ⋆ உம்பர் என் குறை ⋆ மேலைத்
தொண்டு களித்து ⋆ அந்தி தொழும் சொல்லுப் பெற்றேன் ⋆

வண்டு களிக்கும் பொழில் சூழ் ⋆ திருப்பேரான் ⋆
கண்டு களிப்பக் ⋆ கண்ணுள் நின்றகலானே ‖ **10.8.7** ‖

கண்ணுள் நின்றகலான் ⋆ கருத்தின்கண் பெரியன் ⋆
எண்ணில் நுண் பொருள் ⋆ ஏழ் இசையின் சுவை தானே ⋆
வண்ண நன் மணி மாடங்கள் சூழ் ⋆ திருப்பேரான் ⋆
திண்ணம் என் மனத்துப் ⋆ புகுந்தான் செறிந்தின்றே ‖ **10.8.8** ‖

இன்றென்னைப் பொருளாக்கித் ⋆ தன்னை என்னுள் வைத்தான் ⋆
அன்றென்னைப் புறம்போகப் ⋆ புணர்த்ததென் செய்வான் ⋆
குன்றென்னத் திகழ் மாடங்கள் சூழ் ⋆ திருப்பேரான் ⋆
ஒன்றெனக்கருள் செய்ய ⋆ உணர்த்தல் உற்றேனே ‖ **10.8.9** ‖

‡ உற்றேன் உகந்து பணி செய்து ⋆ உன பாதம்
பெற்றேன் ⋆ ஈதே இன்னம் ⋆ வேண்டுவதெந்தாய் ⋆
கற்றார் மறைவாணர்கள் வாழ் ⋆ திருப்பேராற்கு ⋆
அற்றார் அடியார் தமக்கு ⋆ அல்லல் நில்லாவே ‖ **10.8.10** ‖

‡ நில்லா அல்லல் ⋆ நீள் வயல் சூழ் திருப்பேர்மேல் ⋆
நல்லார் பலர் வாழ் ⋆ குருகூர்ச் சடகோபன் ⋆
சொல்லார் தமிழ் ⋆ ஆயிரத்துள் இவைபத்தும்
வல்லார் ⋆ தொண்டர் ஆள்வது ⋆ சூழ் பொன் விசும்பே ‖ **10.8.11** ‖

## திருமழிசைப்பிரான் அருளிச்செய்த – நான்முகன் திருவந்தாதி

‡ நாகத்தணைக் குடந்தை ⋆ வெஃகா திருவெவ்வுள் ⋆
நாகத்தணை அரங்கம் பேர் அன்பில் ⋆ நாகத் -
தணைப் பாற்கடல் கிடக்கும் ⋆ ஆதி நெடுமால் ⋆
அணைப்பார் கருத்தன் ஆவான் ‖ **36** ‖

## திருமங்கையாழ்வார் அருளிச்செய்த – சிறிய திருமடல்

மற்றெனக்கிங்
காரானும் கற்பிப்பார் நாயகரே ⋆ நான் அவனைக்
காரார் திருமேனி காணும் அளவும் போய் ⋆
‡ சீரார் திருவேங்கடமே திருக்கோவலூரே ⋆
மதிட்கச்சி ஊரகமே பேரகமே ⋆
பேரா மருதிறுத்தான் வெள்ளறையே வெஃகாவே ⋆
பேராலி தண்கால் நறையூர் திருப்புலியூர் ⋆
‡ ஆராமம் சூழ்ந்த அரங்கம் ‖ **36** ‖

## திருமங்கையாழ்வார் அருளிச்செய்த – பெரிய திருமடல்

வல்லவாழ்ப்
பின்னை மணாளனைப் பேரில் பிறப்பிலியை ⋆
தொன்னீர்க் கடல் கிடந்த தோளா மணிச் சுடரை ⋆
என்மனத்து மாலை இடவெந்தை ஈசனை ⋆
மன்னும் கடல்மல்லை மாயவனை ‖ **64** ‖

திரு இந்திராதேவி சமேத அப்பக்குடத்தான் திருவடிகளே சரணம்

sunder kidambi prapatti dot com sunder kidambi